1993 அக்டோபர் 27]

27—

தரங்கம்பாடியில் சிறிய துறைமுகம்

*20984—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் தரங்கம்பாடியில் சிறிய துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதி 16 ஊராட்சிகளைக் கொண்ட மீனவர்கள் வசிக்கும் பகுதிகளைக் கொண்ட தொகுதி. அங்கே 50 ஆயிரம் மீனவப் பெருங்குடி மக்கள் வசிக்கின்றார்கள். அவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பதற்கும், ஏற்றுவதற்கும் வசதியாக இல்லை. ஆகவே, 'இல்லை, இல்லை' என்று சொல்லாத புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே, தாங்கள் தயவு செய்து வருகின்ற ஆண்டிலேயாவது ஒரு சிறிய துறைமுகத்தைத் தர வேண்டுகிறேன். இதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமாய் அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகாமையில் இருக்கிற நாகப்பட்டினம் துறைமுகத்தை நாம் விரிவுபடுத்திக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் தரங்கம்பாடி துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறார். அதற்கு இப்போது சாத்தியக்கூறு இல்லை என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் அதை வலியுறுத்தி விரிவுபடுத்த முடியுமா என்று கேட்கிறார்கள். நாகப்பட்டினத்திற்கும், தரங்கம்பாடிக்கும் 37 கி.மீ. தூரம் தான் இருக்கிறது. நாம் ஒரு துறைமுகத்தை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறோம்; துறைமுகம் விரிவுபடுத்துவது என்றால் சாதாரணக் காரியம் அல்ல. அதற்கும் பல கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டிய காரணத்தினால் இதற்கு சாத்தியக் கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.